**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 4051/ஆ5/2023, நாள்.25.09.2023**

.....

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – 2023 – 2024 தேசிய அறிவியல் கருத்தரங்கு – 8 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் அறி வியல் கருத்தரங்கு நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது – 29.09.2023 அன்று மாவட்ட அளவில் அறிவியல் கருத்தரங்கு நடத்துதல் – மாணவர்கள் கலந்துக் கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக |
| பார்வை | சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.45451/எம் / எஸ்2 / 2023, நாள். 15.09.2023 (இவ்வலுவலகம் பெறப்பட்ட நாள் 22.09.2023) |

.....

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க அறிவியல் அருங்காட்சியங்களின் தேசிய கவுன்சில் (கலாச்சார அமைச்சகம் ) சார்பாக 2023 தேசிய அறிவியல் கருத்தரங்கினை பள்ளிகளில் 8ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு தேசிய அளவில் 12.10.2023 அன்று புது டெல்லியில் தேசிய அறிவி யல் மையத்தில் நடத்தப்படவுள்ளது எனவும் , இது தொடர்பாக மாவட்ட அளவில் அறிவியல் கருத்தரங்கு நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது . மேலும், இப்பொருள் சார்பான வ ழிகாட்டுதல்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**மாவட்ட அளவிலான அறிவியல் கருத்தரங்கு**
**நாள்– 29.09.2023 (வெள்ளிக்கிழமை)**
**நேரம் – காலை 9.00 மணி**
**இடம் – அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி வேலூர்.**
**தலைப்பு – "Millets – A Super food or diet fad?**

எனவே, மேற்காணும் குறிப்பிட்டுள்ள நாளில் நடைபெறும் மாவட்ட அளவிலான அறிவியல் கருத்தரங்கில் அனைத்து வகை பள்ளிகளில் 8ம் வகுப்பு முதல் 10–ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் கலந்துக்கொள்வதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை பள்ளித் தலைமையாசி ரியர்கள் / முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டு விவரங்களை மாணவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் . மாவட்ட அளவில் முதலிடம் பெறும் மாணவர் மாநில அளவில் நடைபெறும் அறிவியல் கருத்தரங்கில் கலந்தக்கொள்ள வேண்டும் . மாநில அளவிலான அறிவியல் கருத்தரங்கு 04.10.2023 அன்று நடைபெறும் எனவும் இடம் மற்றும் பிற விவரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணைப்பு – பார்வையின் கடித நகல்

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்
அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலைப் / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகள். வேலூர் மாவட்டம்.

நகல் –

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பள்ளிகளுக்கு தெரிவிக்கும் பொருட்டு )
3. தலைமையாசிரியர், அரசு (முஸ்லீம்) மேல்நிலைப் பள்ளி, வேலூர்.
   (போதிய வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். )